| 3. | Appointment of Mr. Nandkumar Saravade (DIN: 07601861) as a Non-Executive Independent Director for a first term of 3 years w.e.f. June 1, 2026 of the Company | Special Resolution |

The Board of Directors of the Company has appointed CS S. N. Viswanathan (FCS 13685; COP 24335) or failing him CS Malati Kumar (ACS 15508; COP 10980) of M/s. S. N. ANANTHASUBRAMANIAN & CO, Company Secretaries (ICSI Unique Code: P1991MH040400), as the Scrutinizer to conduct the postal ballot through remote e-voting process in a fair and transparent manner.
The details of e-voting period are as under:

| | |
|---|---|
| **Cut-off date** | July 10, 2026 |
| **Commencement of e-voting** | at 9:00 A.M. (IST) on Friday, July 17, 2026 |
| **Conclusion of e-voting** | at 5:00 P.M. (IST) on Saturday, August 15, 2026 |

1. The Cut-off date for the purpose of ascertaining the eligibility of members to cast their vote through remote e-voting facility is July 10, 2026. The Company has engaged the services of National Securities Depository Limited ('NSDL') ("**E-voting agency**") for providing e-voting facility to shareholders.
2. The members whose names appear in the register of members/register of beneficial owners as on the Cut-off date shall only be entitled to avail the remote e-voting facility. A person who is not a member as on the Cut-off date should treat this Notice for information purposes only.
3. In compliance of statutory provisions, the Company has completed the dispatch of Postal Ballot Notice only through e-mail, on, to those shareholders whose e-mail IDs are registered with the Company/Depositories and whose names appear in the register of members/register of beneficial owners as on the Cut-off date. Further, a physical copy of the Notice along with an explanatory statement and Postal ballot form has not been sent to the members for this Postal ballot. Hence, the members are required to communicate their assent/dissent only through a remote e-voting system.
4. The remote e-voting period shall commence at 9:00 A.M. (IST) on Friday, July 17, 2026 and will end at 5:00 P.M. (IST) on Saturday, August 15, 2026. The remote e-voting module will be disabled thereafter by E-voting agency. Once the vote on a resolution is cast by a Member, they shall not be allowed to change it subsequently to cast the vote again. The detailed procedure/instructions for e-voting are specified in the Notes to the Postal Ballot Notice.
5. The results of the voting by e-voting will be announced on or before August 18, 2026, by placing it, along with the scrutinizer's report, on the website of the Company and will also be communicated to Stock Exchange. The Scrutinizer's decision on the validity of a postal ballot/e-voting will be final.
6. The aforesaid Notice along with explanatory statement is available on the website of the Company i.e., www.proteantech.in , website of e-voting agency at www.evoting.nsdl.com and website of National Stock Exchange of India Limited ('NSE') at www.nseindia.com and BSE Limited (BSE) at www.bseindia.com. Those Members, whose e-mail IDs are not registered, are requested to refer to the procedure mentioned in the Notes to Postal Ballot Notice, available on the above websites, to cast their votes electronically.
7. Members holding shares in electronic form are requested to register/update their e-mail IDs with the respective depository participants and in case of shares held in physical form, by sending a request through e-mail to the Registrar and Share Transfer Agent (R&TA) of the Company i.e. MUFG Intime India Private Limited. at e-mail ID investor.helpdesk@in.mpms.mufg.com with a copy marked at cs@proteantech.in.
8. In case of any queries/grievances, members may refer to the Frequently Asked Questions (FAQs) for shareholders and e-voting user manual available at the download section of www.evoting.nsdl.com or refer to the instructions as mentioned in the Postal Ballot Notice or call on toll free nos.: 022 - 4886 7000 or send a request to Mr. Sagar Gudhate, Asst Vice President at their designated e-mail addresses: evoting@nsdl.com. Members may also write to the Company at the e-mail ID: cs@proteantech.in.
9. The results of the Postal Ballot, along with Scrutinizer's Report, will be declared within the statutory timelines by placing the same on the website of the Company i.e. www.proteantech.in e-voting agency i.e. NSDL at www.evoting.nsdl.com. Further the results shall also be communicated to the NSE Limited and BSE Limited simultaneously.

**For and on behalf of Protean eGov Technologies limited**
Sd/-
**Maulesh Kantharia**
**Company Secretary & Compliance Officer**
FCS – 9637

**Date:** July 16, 2026
**Place:** Mumbai

## தியாகிகள் பாஷ்யம், சங்கரலிங்கனார், செண்பகராமனின்

# உயரிய பண்புகளை வாழ்வியல் நெறியாக ஏற்று புதிய சமுதாயத்தை உருவாக்குவோம்

## முதல்-அமைச்சர் விஜய் சூளுரை

சென்னை, ஜூலை.17—

முதல்–அமைச்சர் விஜய் சமூகவலை தள பதிவில் கூறியிருப்பதாவது:—



இந்திய விடுதலைக்கும், மக்களின் உரிமை வாழ்விற்கும் தங்களது இன்னுயிரை ஈந்த தியாகி ஆர்யா (எ) பாஷ்யம், தியாகி சங்கரலிங்கனார் மற்றும் தியாகி செண்பகராமன் ஆகியோருக்கு தியாகிகள் தினத்தை முன்னிட்டு எனது வீரவணக்கங்கள்.

ஆங்கிலேயரின் அதிகாரச் செருக்கை வேரறுக்கும் வகையில், சென்னை புனித ஜார்ஜ் கோட்டைக் கொத்தளத்தில் பறந்த பிரிட்டிஷ் யூனியன் ஜாக் கொடியை இறக்கிவிட்டு, இந்திய மூவர்ணக் கொடியை ஏற்றிய மாவீரர் தியாகி ஆர்யா (எ) பாஷ்யம்,

நமது மாநிலத்திற்கு 'தமிழ்நாடு' என்ற பெயர் சூட்டப்பட வேண்டும் என்ற உயரிய நோக்கத்திற்காகத் தொடர் உண்ணாவிரதமிருந்து இன்னுயிரை ஈந்த தியாகி சங்கரலிங்கனார், 'ஜெய் ஹிந்த்' என்ற முழக்கத்தை சுதந்திரப் போராட்டத்திற்கு அளித்து, இந்திய விடுதலைக்காக சர்வதேச ஆதரவைத் திரட்டிய, வீரத்தியாகி செண்பகராமன் ஆகியோரின் அயராத உழைப்பும் தன்னலமற்ற தியாகமும் என்றென்றும் போற்றத்தக்கது.

இத்தகைய தியாகிகளின் உயரிய பண்புகளை வாழ்வியல் நெறியாக ஏற்று, மனிதநேயமும் நாட்டுப்பற்றும் கொண்ட புதிய சமுதாயத்தை உருவாக்கிடுவோம்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# தங்கம் விலை பவுனுக்கு மேலும் ரூ.400 குறைந்தது

## ரூ.1,04,800-க்கு விற்பனை

சென்னை, ஜூலை.17—

இந்த மாதம் தொடக்கத்தில் இருந்தே தங்கத்தின் விலை சரிவை சந்தித்து வருகிறது. கடந்த 10–ந்தேதி முன்பு ஒரு கிராம் தங்கம் ரூ.13,350, ஒரு பவுன் ரூ.106,800 ஆக இருந்தது. பின்னர் தங்கம் விலை தொடர்ந்து இறங்கு முகமாக இருந்தது.

**பவுனுக்கு ரூ.400 குறைந்தது**

நேற்று முன்தினம் தங்கத்தின் விலை ஒரு கிராம் ரூ.13,180, ஒரு பவுன் ரூ.1 லட்சத்து 5 ஆயிரத்து 440 ஆக இருந்தது. நேற்று கிராமுக்கு ரூ.30–ம், பவுனுக்கு 240–ம் குறைந்து ஒரு கிராம் தங்கம் ரூ.13,150, பவுன் ரூ.1 லட்சத்து 5 ஆயிரத்து 200 ஆகவும் இருந்தது.

இன்று தங்கத்தின் விலை கிராமுக்கு மேலும் ரூ.50–ம், பவுனுக்கு ரூ.400–ம் குறைந்து உள்ளது. அதன்படி இன்று ஒரு கிராம் தங்கம் ரூ.13,100, பவுன் ரூ.1 லட்சத்து 4 ஆயிரத்து 800–க்கு விற்பனை ஆகிறது.

**வெள்ளி விலை**

கடந்த 2 நாட்களாக ஒரு கிராம் ரூ.240, ஒரு கிலோ ரூ.2 லட்சத்து 40 ஆயிரத்துக்கு விற்பனை ஆன வெள்ளியின் விலை இன்று கிராமுக்கு ரூ.5–ம், கிலோவுக்கு ரூ.5 ஆயிரமும் சரிந்துள்ளது. அதன்படி இன்று ஒரு கிராம் வெள்ளி ரூ.235, ஒரு கிலோ ரூ.2 லட்சத்து 35 ஆயிரத்துக்கு விற்கப்படுகிறது.

## திருவள்ளூரில் போலி நகை கொடுத்து

# அடகு கடையில் ரூ.1.91 கோடி கொள்ளை

## மர்ம நபர்கள் துணிகரம்

திருவள்ளூர், ஜூலை.17—

திருவள்ளூர் அடுத்த புல்லரம்பாக்கம் பகுதியில் அடகு கடை நடத்தி வருபவர் புவியரசன். இவரது கடைக்கு காரில் 2 மர்ம வாலிபர்கள் வந்தனர்.

அவர்கள் புவியரசனிடம் பேச்சுகொடுத்து தங்களிடம் 2 கிலோ தங்க நகை உள்ளதாகவும் குறைந்த விலைக்கு விற்பதாகவும் தெரிவித்தனர்.

இதையடுத்து அந்த நகைக்கு ரூ.1.91 கோடி தருவதாக தெரிவித்தார். மேலும் பணம் இருந்த பையையும் புவியரசன் காண்பித்தார்.

இதையடுத்து மர்ம நபர்கள் கொடுத்த 2 கிலோ தங்க நகையில் 32 கிராம் கொண்ட செயினை புவியரசன் சோதனை செய்து பார்க்க கடையின் உள்ளே இருந்த அறைக்கு சென்றார்.

அந்த நேரத்தில் மர்ம நபர்கள் ரூ.1.91 கோடி பணம் இருந்த பையை கொள்ளையடித்து அங்கிருந்து காரில் தப்பி சென்று விட்டனர்.

இதற்கிடையே புவியரசன் சோதனை செய்தபோது மர்ம நபர்கள் கொடுத்தது தங்க முலாம் பூசிய செம்பு நகை என்பது தெரிந்தது. உடனடியாக அவர் கடைக்குள் வந்து பார்த்தபோது மர்மநபர்கள் பணத்தை கொள்ளையடித்து தப்பி சென்று இருப்பதை கண்டு அதிர்ச்சி அடைந்தார்.

இதுகுறித்து புவியரசன் மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு அலுவலகத்தில் புகார் அளித்தார். இது தொடர்பாக புல்லரம்பாக்கம் போலீசார் வழக்குப்பதிவு செய்து அடகு கடை இருந்த பகுதியில் உள்ள கண்காணிப்பு கேமரா காட்சிகளை ஆய்வு செய்து வருகின்றனர். இச்சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

## பெரியமேடு லாட்ஜில் பலாத்காரம் செய்ததாக புகார்

# வங்கி பெண் அதிகாரியை காதலித்து ஏமாற்றிய போலீஸ்காரர் கைது

## வேப்பேரி போலீசார் அதிரடி நடவடிக்கை

சென்னை, ஜூலை.17—

மயிலாடுதுறையை சேர்ந்த 26 வயதான இளம் பெண். தனியார் வங்கியில் அதிகாரியாக பணிபுரிந்து வருகிறார். இவரும் திருச்சியை சேர்ந்த போலீஸ்காரர் கார்த்திகேயன் என்பவரும் காதலித்து வந்துள்ளனர். இந்த நிலையில் வங்கி அதிகாரி சென்னைக்கு மாறுதலாகி பணிபுரிந்து வந்துள்ளார். போலீஸ்காரர் கார்த்திகேயன் சென்னை பெரிய மேட்டில் உள்ள தனியார் தங்கும் விடுதியில் வங்கி அதிகாரியை திருமணம் செய்து கொள்வதாக ஏமாற்றி பாலியல் பலாத்காரம் செய்ததாக கூறப்படுகிறது.

அதன்பிறகு பெண் வங்கி அதிகாரியை திருமணம் செய்து கொள்ளாமல் ஏமாற்றியுள்ளார். பெண் வங்கி அதிகாரி கொடுத்த புகாரில் வேப்பேரி அனைத்து மகளிர் போலீசார் திருச்சி சென்று கார்த்திகேயனை கைது செய்தனர். சென்னைக்கு அழைத்து வந்து அவரிடம் விசாரணை நடைபெற்று வருகிறது.



அரியானா மாநிலத்தில் இன்று நடந்த விழாவில் இந்தியாவின் முதல் ஹைட்ரஜன் ரெயில் சேவையை பிரதமர் மோடி கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

# இந்தியாவின் முதல் ஹைட்ரஜன்...

3-ம் பக்க தொடர்ச்சி

பணிகள் முடிவடைந்ததை தொடர்ந்து சோதனை ஓட்டங்களும் நடைபெற்றன. இதையடுத்து, ஹைட்ரஜன் பயணிகள் ரெயிலை அறிமுகப்படுத்த கடந்த மே 22–ந்தேதி ரெயில்வே வாரியம் ஒப்புதல் அளித்தது.

இந்த நிலையில் இந்தியாவின் முதலாவது ஹைட்ரஜன் ரெயில் தொடக்க விழா அரியானா மாநிலம் ஜிந்த் ரெயில் நிலையத்தில் இன்று காலை நடைபெற்றது. இதையொட்டி ஹைட்ரஜன் ரெயில் முழுவதும் மலர்களால் அலங்காரம் செய்யப்பட்டு இருந்தது.

**தொடங்கி வைத்தார்**

விழாவில் பிரதமர் நரேந்திர மோடி பங்கேற்று ஹைட்ரஜன் ரெயிலை கொடியசைத்து தொடங்கி வைத்தார். ஜிந்த் ரெயில் நிலையத்தில் இருந்து புறப்பட்டு சென்ற முதல் ஹைட்ரஜன் ரெயிலில் பள்ளி மாணவ–மாணவிகள் தேசிய கொடியை அசைத்தபடியே உற்சாகமாக பயணம் செய்தனர். அவர்களை பார்த்து பிரதமர் மோடி கையசைத்தார்.

விழாவில் பிரதமர் மோடிக்கு மத்திய ரெயில்வே மந்திரி அஸ்வினி வைஷ்ணவ் ஹைட்ரஜன் ரெயில் மாதிரியை நினைவு பரிசாக வழங்கினார்.

ஹைட்ரஜன் ரெயில் சேவை தொடங்கி வைக்கப்பட்டதன் மூலம் தூய எரிசக்திக்கு மாறும் இந்தியாவின் லட்சிய பயணம் மற்றும் நிலையான — பசுமையான ரெயில் போக்குவரத்துக்கான புதிய அத்தியாயம் தொடங்கியுள்ளது.

**ஐ.சி.எப். தொழிற்சாலை**

ஜெர்மனியில் முதன்முதலாக உலகின் முதல் ஹைட்ரஜன் பயணிகள் ரெயில் கடந்த 2018–ம் ஆண்டு இயக்கப்பட்டது. பின்னர் ஜப்பான், சீனா, அமெரிக்கா ஆகிய நாடுகள் தங்கள் நாடுகளில் தயாரிக்கப்பட்ட ஹைட்ரஜன் ரெயிலை இயக்கின. தமிழகத்துக்கு பெருமை சேர்க்கும் விதமாக, இந்த வரலாற்று சிறப்புமிக்க முதல் ஹைட்ரஜன் ரெயில், சென்னை பெரம்பூரில் உள்ள ஐ.சி.எப். தொழிற்சாலையில் முழுமையாக வடிவமைக்கப்பட்டு தயாரிக்கப்பட்டு உள்ளது.

இந்த ரெயில் சுற்றுச்சூழலுக்கு கேடு விளைவிக்காத வகையில் ஹைட்ரஜன் எரிபொருள் தொழில்நுட்பம், பூஜ்ஜிய கார்பன் உமிழ்வை கொண்டது. இதன் மூலம் சுற்றுச்சூழல் பாதுகாக்கப்படுவதுடன், புதைபடிவ எரிபொருட்களின் இறக்குமதியும் குறையும்.

**குறைந்த கட்டணம்**

பன்முக பாதுகாப்பு அம்சங்களுடன் கூடிய இந்த ரெயில் அரியானா மாநிலத்தில் மின்மயமாக்கப்படாத 89 கி.மீ. நீளமுள்ள ஜிந்த் — சோனிபட் வழித்தடத்தில் உள்ள 12 ரெயில் நிலையங்களை இணைக்கும் வகையில் இயக்கப்படுகிறது. இந்த ரெயில், உலகின் மிக நீளமான, அதிக திறன் கொண்ட ஹைட்ரஜன் ரெயில் திட்டங்களில் ஒன்றாகும்.

இந்த ரெயில் தினமும் 2 முறை இருமார்க்கங்களிலும் இயக்கப்படும். ஏழை, நடுத்தர மக்கள் பயன்பெறும் வகையில் இதன் பயண கட்டணம் மிக குறைவாக ரூ.5 முதல் அதிகபட்சமாக ரூ.25 வரை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

**நவீன தொழில்நுட்பம்**

மேல்நிலை கம்பிகளில் இருந்து மின்சாரத்தை பெறும் வழக்கமான மின்சார ரெயில்களை போல் அல்லாமல் ஹைட்ரஜன் ரெயிலானது ஹைட்ரஜன் — ஆக்சிஜன் வேதிவினை மூலம் ரெயிலுக்கு உள்ளேயே மின்சாரத்தை உற்பத்தி செய்து பயன்படுத்தும். 1200 கிலோவாட் திறன்கொண்ட ஹைட்ரஜன் எரிபொருள் மின்கல உந்துவிசை அமைப்பின் நவீன தொழில்நுட்பத்தில் இந்த ரெயில் இயங்குகிறது. ரெயில் வேகம் எடுக்கும் போது உந்துதலை தர லித்தியம் பெரோ பாஸ்பேட் பேட்டரிகளும், ரெயில் வேகம் குறையும் போது பேட்டரியை தானாகவே ரீசார்ஜ் செய்யும் மறு உருவாக்க தொழில்நுட்பமும் இணைக்கப்பட்டுள்ளன.

**10 பெட்டிகள்**

பிரதமர் மோடி தொடங்கி வைத்துள்ள ஹைட்ரஜன் ரெயில் 2 டிரைவர் பெட்டிகள், 8 பயணியர் பெட்டிகள் என 10 பெட்டிகளை கொண்டது. ஒரே நேரத்தில் 2,600–க்கும் மேற்பட்ட பயணிகளை ஏற்றி செல்லும் திறன் கொண்டது.

சோதனையின்போது இந்த ரெயில் அதிகபட்சமாக மணிக்கு 120 கி.மீ. வேகத்தை தொட்டது. ஆனாலும், பாதுகாப்பான, வழக்கமான இயக்கத்துக்காக மணிக்கு 75 கி.மீ. வேகத்தில் மட்டுமே இயக்கப்பட உள்ளது. இந்த ரெயில் ஜிந்த் — சோனிபட் நகரங்களுக்கு இடையிலான 89 கி.மீ. தூரத்தை 2 மணி நேரத்தில் கடக்கும்.

**பாதுகாப்பு அமைப்பு**

ஹைட்ரஜன் கசிவுகள், வெப்பம், தீப்பிழம்புகள், புகையை முன்கூட்டியே கண்டறியும் பன்முக பாதுகாப்பு அமைப்புகளுடன் பாதுகாப்பான ரெயில் என்ற சிறப்பையும் ஹைட்ரஜன் ரெயில் கொண்டுள்ளது.

இந்தியாவில் தற்போது 99 சதவீதத்துக்கும் மேற்பட்ட அகல ரெயில் பாதை வழித்தடங்கள் மின்மயமாக்கப்பட்டு உள்ளன. இந்த நிலையில் மாசில்லா ரெயில் இயக்கத்துக்கான அடுத்த கட்ட பாய்ச்சலை இந்திய ரெயில்வே முன்னெடுத்து உள்ளது.

**நெடுஞ்சாலை திட்டங்கள்**

இந்த நிகழ்ச்சியை தொடர்ந்து ஜிந்த் எச்.எஸ்.வி.பி. மைதானத்தில் நடைபெறும் விழாவில் சுமார் ரூ.14 ஆயிரத்து 700 கோடி மதிப்பிலான தேசிய நெடுஞ்சாலை திட்டங்களை பிரதமர் மோடி தொடங்கி வைத்து நாட்டுக்கு அர்ப்பணித்தார்.

இதில் ரூ.9,680 கோடி மதிப்பில் அமைக்கப்பட்ட 157.92 கிலோமீட்டர் நீளமுள்ள டெல்லி — அமிர்தசரஸ் — கத்ரா விரைவுச்சாலையின் 1 முதல் 5 வரையிலான தொகுப்புகள் அடங்கும். இது டெல்லி முதல் கத்ரா வரையிலான பயண நேரத்தை 14 மணி நேரத்தில் இருந்து 6 மணி நேரமாக குறைக்கும். மேலும் அம்பாலா — கலா அம்ப் நெடுஞ்சாலை, ஜிந்த் — கோஹனா பசுமை வழிச்சாலை திட்டங்களையும் தொடங்கி வைத்து நாட்டுக்கு அர்ப்பணித்தார்.

**ரெயில்வே மேம்பாலம்**

குருஷேத்ராவில் போக்குவரத்து நெரிசலை குறைக்கும் வகையில் உயர்மட்ட ரெயில்வே மேம்பால பாதையை பிரதமர் மோடி தொடங்கி வைத்தார். அங்கு சீக்கிய குருமார்களின் வரலாற்றை பறைசாற்றும் அதிநவீன சீக்கிய அருங்காட்சியகத்திற்கும் பிரதமர் மோடி அடிக்கல் நாட்டினார். பிவானி, நார்னால் ஆகிய இடங்களில் புதிய மருத்துவ கல்லூரிகளையும் அவர் திறந்து வைத்தார்.

இன்று பிற்பகலில் சண்டிகர் செல்லும் பிரதமர் மோடி, அங்கு சுகாதாரம், கல்வி, சாலை உள்கட்டமைப்பு சார்ந்த ரூ.6,600 கோடிக்கும் அதிக மதிப்பிலான திட்டங்களை தொடங்கி வைக்கிறார். சண்டிகர் முதுகலை மருத்துவ கல்வி ஆராய்ச்சி நிறுவனத்தில் அதிநவீன தாய் — சேய் நல மையம், நரம்பியல் அறிவியல் மையம் ஆகியவற்றை அவர் திறந்து வைக்கிறார். மொஹாலி தகவல் தொழில்நுட்ப நகரம் முதல் குராலி வரையிலான 6 வழி பசுமைச்சாலை உள்ளிட்ட முக்கிய சாலை திட்டங்களுக்கும் பிரதமர் மோடி அடிக்கல் நாட்டுகிறார்.

## தட்கல் முறையில் பணம் கட்டி காத்திருக்கும்

# விவசாயிகளுக்கு தாமதமின்றி மின் இணைப்பு வழங்க வேண்டும்

## ஜி.கே.வாசன் வலியுறுத்தல்

சென்னை, ஜூலை 17—

த.மா.கா. தலைவர் ஜி.கே.வாசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:—

தமிழக அரசு விவசாயிகளுக்கு துணை நிற்கும் வகையில் செயல்பட வேண்டும். தமிழ்நாடு மின்சார வாரியம் சுமார் 50 ஆயிரம் விவசாயிகளிடம் இருந்து தட்கல் மின் இணைப்புக்கு ரூ. 1,250 கோடி வசூலித்துவிட்டு ஆண்டுகள் கடந்தும் இன்னும் மின் இணைப்பு தரவில்லை என விவசாயிகள் குறை கூறுகின்றனர். 5 ஹெச்பி முதல் 15 ஹெச்பி வரையிலான மின் மோட்டார்களுக்கு ரூ. 2.5 லட்சம் முதல் ரூ. 4 லட்சம் வரை முன்கூட்டியே கட்டணம் செலுத்தி, சுமார் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட விவசாயிகள் காத்திருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. மேலும் மொத்தமாக ரூ.1,250 கோடிக்கும் மேல் மின்வாரியத்திடம் கட்டப்பட்டும், பல மாதங்களாக இணைப்பு வழங்கப்படாமல் இழுத்தடிக்கப்படுவதால், விவசாயிகள் பெரும் வட்டி சுமைக்கு ஆளாகி வருகின்றனர்.

வணிக நிறுவனங்களுக்கு 90 நாட்களில் மின் இணைப்பு வழங்கப்படும் நிலையில், விவசாயிகளுக்கு மட்டும் தாமதம் ஏற்படுவதால் விவசாயிகள் சங்கங்கள் தொடர்ச்சியாக கோரிக்கைகளை முன்வைத்து வருகின்றன.

எனவே தமிழக அரசு —மின் இணைப்புக்கு தட்கல் முறையில் பணம் செலுத்தி காத்திருக்கும் விவசாயிகளுக்கு காலம் தாழ்த்தாமல் மின் இணைப்பு கிடைக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.


**IN THE COURT OF IX ASSISTANT CITY CIVIL COURT AT CHENNAI**
**EA No.4 of 2026 in EP No.695 of 2023**

S. Syed Rabiya ...Decree holder

–Vs–

P. Abdul Razack alias Razack ...Judgement debtor

To
P. Abdul Razack alias Razack, Son of Abdul Kader alias P. Kader, No.43, Arasappan Street, Purasawalkam, Chennai–600007.

Take notice that in the above EP, which was filed by me on behalf of my client, S. Syed Rabiya, the Hon'ble IX Asst. City Civil Court, Chennai, was pleased to order notice to you returnable by 30.7.2026. There–fore, appear before the above said Court on the said date at 10.30 A.M. either in person or through your pleader falling which the above EP will be heard and decided in your absence.

**K.V. SUNDARARAJAN**
**Advocate**



மாண்புமிகு முதலாவது கூடுதல் சார்பு நீதிமன்றம், மதுரை
O.S.No.759/2024

G.கமலபிரசாத் –வாதி

–VS–

1.பங்காருசாமி (இறப்பு)
2.A.சாந்தி
3.உயர்திரு.சார்பதிவாளர், தல்லாகுளம், மதுரை
4.உயர்திரு.மாவட்ட ஆட்சியர், மதுரை
5.B.யாமினி, D/o.லேட்.G.பங்காருசாமி, ப.எண்.4, பு.எண்.12, AFI KENP PALACE. மாரியம்மன் கோவில் தெரு,அசோக் நகர், அரும்பாக்கம், சென்னை–600 106.

–பிரதிவாதிகள்

அறிவிப்பு

மேற்கண்ட பிரதிவாதிகளுக்கு எதிராக வாதி தாக்கல் செய்துள்ள அசல் வழக்கு எண்.759/2024–ல் 5–ம் பிரதிவாதி ஆகிய தாங்கள் ஆஜராவதற்கு 10.8.2026 அன்று வாய்தா ஏற்பட்டுள்ளது. ஏதேனும் ஆட்சேபனை இருந்தால் மேற்படி தினம் காலை 10.00 மணிக்கு சமூகம் நீதிமன்றத்தில் நேரிலோ அல்லது தங்களது வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராகி ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ள வேண்டியது. தவறினால் ஒரு தலைபட்சமாக தீர்மானிக்கப்படும் என்று இதன் மூலம் அறிவிக்கலாயிற்று.

J.பிரபாகரன், M.A., B.L.
வழக்கறிஞர், மதுரை




## பூந்தமல்லி அருகே பரபரப்பு

# வங்கியில் தீ விபத்து

பூந்தமல்லி, ஜூலை.17—

பூந்தமல்லி அடுத்த சென்னீர்குப்பம், ஆவடி சாலையில் கனரா வங்கி செயல்பட்டு வருகிறது. நேற்று மாலை பணி முடிந்ததும் வழக்கம் போல் ஊழியர்கள் வங்கியை பூட்டி சென்றனர்.

இந்த நிலையில் இன்று அதிகாலை வங்கியின் உள்பகுதியில் இருந்து திடீரென கரும்புகை வந்தது. சிறிது நேரத்தில் தீ மளமளவென பற்றி எரிந்தது.

இதனை கண்டு அதிர்ச்சி அடைந்த பணியில் இருந்த காவலாளி மற்றும் அக்கம் பக்கத்தினர் தீயணைப்பு நிலையத்திற்கு தகவல் தெரிவித்தனர். இதற்குள் வங்கியில் தீ கொழுந்துவிட்டு எரிய தொடங்கியது.

தகவல் அறிந்ததும் பூந்தமல்லி தீயணைப்பு வீரர்கள் விரைந்துவந்தனர். அவர்கள் தண்ணீரை பீய்ச்சி அடித்து தீ மேலும் பரவாமல் கட்டுக்குள் கொண்டு வந்து அணைத்தனர்.



தீ விபத்து ஏற்பட்ட வங்கியையும், பொருட்கள் தீயில் கருகி இருப்பதையும் படத்தில் காணலாம்.

எனினும் வங்கியில் இருந்த முக்கிய ஆவணங்கள், ஏ.சி.எந்திரம், மேஜை, நாற்காலி உள்ளிட்ட பர்னிச்சர் பொருட்கள் முழுவதும் சேதமானது. மேலும் இந்த தீ விபத்தில் வங்கியில் இருந்த பணம் மற்றும் நகைகள் வைக்கப்பட்டிருந்த பகுதியில் தீ பரவுவதற்கு முன்பாகவே தீ அணைக்கப்பட்டதால் பணம், நகைகள் தப்பின.

ஏ.சி.யில் ஏற்பட்ட மின் கசிவு காரணமாக தீ விபத்து ஏற்பட்டதா? அல்லது வேறு ஏதேனும் காரணமா என்று பூந்தமல்லி போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## சோமங்கலம் அருகே வாலிபர் கடத்தி கொலை

# குற்றவாளிகளை கைது செய்யக்கோரி உறவினர்கள் 'திடீர்' சாலை மறியல்

படப்பை, ஜூலை.17—

சோமங்கலம் அருகே சேத்துப்பட்டு பகுதியைச் சேர்ந்தவர் ராஜேஷ் (32). இவரை நேற்று முன்தினம் இரவு அதே பகுதியைச் சேர்ந்த ஆனந்த ஜோதி, தங்கம் ஆகியோர் காரில் அழைத்து சென்றனர்.

பின்னர் மது குடித்த போது ஏற்பட்ட தகராறில் ராஜேசை கல்லால் அடித்து கொலை செய்தனர். இது தொடர்பாக ஆனந்தஜோதி, தங்கம் ஆகிய 2 பேரும் சோமங்கலம் போலீஸ் நிலையத்தில் சரண் அடைந்தனர். அவர்கள் 2 பேரையும் போலீசார் கைது செய்து விசாரணை நடத்தி வருகிறார்கள். கொலையுண்ட ராஜேசின் உடல் பிரேத பரிசோதனைக்கு குரோம்பேட்டை அரசு மருத்துவ மனையில் வைக்கப்பட்டு உள்ளது.

இந்த நிலையில் ராஜேஷ் கொலையில் மேலும் சிலர் இருப்பதாகவும் அவர்களையும் கைது செய்யக்கோரி அவரது உறவினர்கள் ஏராளமானோர் இன்று காலை தாம்பரம்— ஸ்ரீபெரும்புதூர் நெடுஞ்சாலையில் மறியலில் ஈடுபட்டனர்.

மணிமங்கலம் காவல் உதவி ஆணையர் சுந்தர் தலைமையிலான போலீசார் போராட்டத்தில் ஈடுபட்டவர்களிடம் சம்பந்தப்பட்ட குற்றவாளிகள் அனைவர் மீதும் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதி அளித்தனர்.

இதைத்தொடர்ந்து மறியலில் ஈடுபட்டவர்கள் அங்கிருந்து கலைந்து சென்றனர். இந்த மறியல் போராட்டத்தால் அப்பகுதியில் சிறிது நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.



மறியலில் ஈடுபட்டவர்களுடன் போலீசார் பேச்சுவார்த்தை நடத்திய காட்சி.


**ENROLMENT NOTICE**

After 10 days of the publication of this notice and within THREE months thereafter, 1 Tejasvi.M, D/o.Mur ugavel. B, Age 24, Permane ntly re siding at 3C, Woodwind Apartments, No.37/42, 10th Av enue, Ashok Nagar, Chennai-600083. Intend having my enrolment as an advocate moved before the bar council of Tamilnadu and Pudu cherry, Bar Council Buildings High Court Campus, Chennai-104. Those who have any valid objections may notify the same to Bar Council within 10 days.

**TEJASVI.M**



IN THE COURT OF THE XXVI Asst CITY CIVIL COURT AT CHENNAI
Execution Petition No. 1919 of 2018
In O.S.No.4581 of 2014

Mr.P.Ravindrakumar, through his Power Agent Mr. V.Ravi, S/o. Viswanathan, ----Decree–Holder/Plaintiff

--Vs--

1. Mrs. Santhanammal (deceased) ----Judgement–Debtor/ Defendant
2. Mr. Yesudass, S/o. Stephen Raj ---2–Judgement–Debtor

To,
Mr.S. Yesudass J–D2 S/o Stephanraj
No. 1, Periyapalayathamman Koil 9th Street, Moolakothalam, Old Washermenpet, Chennai–600021.

Please take Notice that in the above Execution Petition filed against you for Sale of your Immovable Property described in the Schedule hereunder. You are hereby requested to be present in person of through your Counsel and your property will be Auctioned in public as per Order of the Hon'ble XXVI Asst. City Civil Court, Chennai at 4.00 P.M on 05–08–2026 in the City Civil Court Campus, High Court Building, Chennai–600 104.

SCHEDULE OF JD–2 PROPERTY

All that piece and parcel of the house with building Door No. 1, Periyapalayathamman Koil 9th Street, Moolakothalam, Old Washermenpet, Chennai–600021, measuring an extent of 604 sq.ft., comprised in R.S.No. 1802 and 1802/65 and bounded on the
North by :R.S.No. 1802/35
South by: R.S.No. 1802/69 and 1802/70
East by : R.S.No. 1802/56
West by : R.S.No. 1802/64
AND MEASURING ON THE
North to South on the Eastern side:19 Feet
North to South on the Western side: 21 Feet
East to West on the Northern side:27 Feet
East to west on the Southern side: 30 Feet,
in all admeasuring an extent 604sq.ft., and situate within the Registration District of North Chennai and Sub–Registration District of Royapuram.

**Mr. M.SIVARAMAKRISHNAN**
COUNSEL FOR DECREE–HOLDER



alldigi tech
formerly allsec technologies
A digitide company

**அல்டிஜி டெக் லிமிடெட்**
**(முன்னாள் அல்செக் டெக்னாலஜிஸ் லிமிடெட்)**
CIN: L72300TN1998PLC041033
பதிவு அலுவலகம் : 46C, வேளச்சேரி மெயின் ரோடு, வேளச்சேரி, சென்னை - 600 042 Tel: 044 - 4299 7070
Website: www.alldigitech.com E-mail: investorcontact@alldigitech.com

**காணொலி காட்சி மூலமாக நடைபெறவுள்ள 27 வது வருடாந்திரப் பொதுக்கூட்டத்தின் அறிவிப்பு மற்றும் மின்னணு வாக்குப்பதிவு பற்றிய தகவல்**

ஆல்டிஜி டெக் லிமிடெட் ('நிறுவனம்') உறுப்பினர்களின் இருபத்தி ஆறாவது (27வது) ஆண்டு பொதுக்கூட்டம் (AGM) காணொலி காட்சி ("VC") பிற ஆடியோ காட்சி வழிமுறைகள் ("OAVM") புதன்கிழமை ஆகஸ்ட், 12, 2026 அன்று மதியம் 2.00 (IST) மணிக்கு நடைபெறும் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

கார்ப்பரேட் விவகார அமைச்சகம், (MCA) செப்டம்பர் 19, 2024 தேதியிட்ட பொது சுற்றறிக்கை எண். 03/2026 ஐப் பயன்படுத்தி வெளியிட்டுள்ளது. இந்திய பத்திரங்கள் மற்றும் பரிவர்த்தனை வாரியம் (SEBI), அக்டோபர் 3, 2024 தேதி அதன் தேதியிட்ட சுற்றறிக்கையின்படி பயன்படுத்தி, இது தொடர்பாக முன்னர் வெளியிட்ட சுற்றறிக்கைகளுடன் (ஒட்டுமொத்த 'சுற்றறிக்கைகள்' என்று குறிப்பிடப்படுகிறது) VC/OAVM மூலம் AGMI நடத்த அனுமதித்துள்ளது. சுற்றறிக்கைள் மற்றும் நிறுவனங்கள் சட்டம், 2013 இன் தொடர்புடைய விதிகளுக்கு இணங்க, நிறுவனத்தின் AGM இல் VC/OAVM மூலம் நடைபெறும். மேலும் AGM இல் VCIOAVM மூலம் கலந்து கொள்ளும் உறுப்பினர்களின் வருகை சட்டத்தின் பிரிவு 103 இன் கீழ் கோரத்தை (quorum) கணக்கிடுவதாக காட்டப்படும்.

2025-26 நிதியாண்டுக்கான வருடாந்திரஅறிக்கையுடன் கூடிய வருடாந்திரப் பொதுக்கூட்ட அறிவிப்பு, நிறுவனம் / பதிவாளர் - பரிமாற்ற முகவர்கள் ("RTA") / வைப்புத் தொகை பங்கேற்பாளர்கள் ("DPs")ஆகியோரிடம் மின்னஞ்சல் முகவரிகள் பதிவுசெய்யப்பட்ட உறுப்பினர்களுக்கு மின்னணு முறையில் அனுப்பப்படும். மேலும் நிறுவனத்தின் வலைதளமான https://www.alldigitech.com/investor-information/ மற்றும் பங்குச் சந்தைகளின் வலைத்தளமான BSE Limited மற்றும் National Stock Exchange of India Limited ஆகியவற்றின் வலைத்தளமான www.bseindia.com மற்றும் www.nseindia.com இல் வெளியிடப்படும்.

டிமெட்டீரியலைஸ் செய்யப்பட்ட முறையில் பங்குகளை வைத்திருக்கும் பங்குதாரர்கள், தங்கள் மின்னஞ்சல் ஐடியை தொடர்புடைய வைப்புத் தொகை யாளர்களுடன் பதிவு செய்யுமாறும் காகித முறையில் பங்குகளை வைத்தி ருக்கும் பங்குதாரர்கள் நிறுவனத்தின் RTA, KFin Technologies Limited-க்கு sinward.ris@kfintech.com என்ற முகவரிக்கு விவரங்களை வழங்குமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். ஆண்டு பொதுக்கூட்ட அறிவிப்பு மற்றும் ஆண்டு அறிக்கையை அணுகுவதற்கான வலை இணைப்பை வழங்கும் தனி கடிதம் நிறுவனம் / வைப்புத்தொகையாளர்களுடன் தங்கள் மின்னஞ்சல் முகவரியைப் பதிவு செய்யாத பங்குதாரர்களுக்கும் அனுப்பப்படும். இயக்குனர் குழு M/s. DPV & Associates LLP (பதிவு எண் L2021HR009500)ஐ AGM இல் டிஜிட்டல் வோட்டிங் மற்றும் தொலைதூர ஈ-வோட்டிங் செயல்முறையை நியாயமாகவும் வெளிப்படையான முறையிலும் நடத்துவதற்காக ஆக நியமித்துள்ளனர்.

நேஷனல் செக்யூரிட்டீஸ் டெபாசிட்டரி லிமிடெட் (NSDL) வழங்கிய மின்னணு வாக்குப்பதிவு முறை தளத்தை (மின்னணு-வாக்குப்பதிவு) பயன்படுத்தி, வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தீர்மானங்களின் மீது வாக்களிக்கும் உரிமையை நிறுவனம் அதன் உறுப்பினர்களுக்கு வழங்குகிறது. மின்னணு வாக்குப்பதிவு காலம் ஞாயிற்றுக்கிழமை, ஆகஸ்ட் 09.2026 (காலை 9.00 மணி IST) தொடங்கி செவ்வாய்க்கிழமை, ஆகஸ்ட் 11.2026 (மாலை 5.00 மணி IST) முடிவடைகிறது. இந்த காலக்கட்டத்தில், புதன்கிழமை ஆகஸ்ட்,05.2026 அன்று பங்குகளை வைத்திருக்கும் உறுப்பினர்கள், அதாவது கட்-ஆஃப் தேதி, மின்னணு முறையில் வாக்களிக்கலாம். மேலும் ஆண்டு பொதுக்கூட்டத்தில் மின்னணு வாக்குப் பதிவுக்கான வசதியும் ஆண்டு பொதுக்கூட்டத்தின் போது கிடைக்கும். மின்னணு வாக்களிப்பு மூலம் வாக்களிக்காத உறுப்பினர்கள், வருடாந்திர பொதுக் கூட்டத்தின் போது வாக்களிக்கலாம்.

டிமேட் மற்றும் காகித முறையில் பங்குகளை வைத்திருக்கும் பங்குதாரர்கள் வருடாந்திர பொதுக்கூட்டத்தில் வாக்களிக்கும் முறை அல்லது வருடாந்திர பொதுக்கூட்டத்தில் சேரும் செயல்முறை ஆகியவை வருடாந்திர பொதுக் கூட்டத்தின் அறிவிப்பில் விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

அறிவிப்பை அனுப்பி, கடைசி தேதியின்படி பங்குகளை வைத்திருந்த பிறகு, நிறுவனத்தின் பங்குகளைப் பெற்று, நிறுவனத்தின் உறுப்பினராக மாறும் எந்த வொரு நபரும், evoting@nsdl.com என்ற முகவரிக்கு கோரிக்கையை அனுப்பி உள்நுழைவு ஐடி மற்றும் கடவுச்சொல்லைப் பெறலாம். இருப்பினும், தொலைதூர மின்னணு வாக்களிப்புக்காக அவர்/அவள் எற்கெனவே NSDL இல் பதிவு செய்திருந்தால், வாக்களிக்க தனது தற்போதைய பயனர் ஐடி மற்றும் கடவுச் சொல்லைப் பயன்படுத்தலாம்.

பட்டியலிடப்பட்ட நிறுவனங்களால் வழங்கப்படும் மின்னணு வாக்குப்பதிவு SEBI : SEBI/HO/CFD/CMD/CIR/P/2020/242, நாள் : டிசம்பர் 09, 2020-ன் அடிப்படையில் டிமாட் முறையில் பங்குகளை வைத்திருக்கும் தனிப்பட்ட பங்குதாரர்கள், தங்களுடைய டிமாட் கணக்குகள் பராமரிக்கப்படும் டெபாசிட்டரி மற்றும் டெபாசிட்டரி பங்குதாரர்களின் வாயி லாகவும் வாக்களிக்க அனுமதிக்கப்படுகிறார்கள். பங்குதாரர்கள் மின்னணு வசதியை பெறுவதற்காக, தங்களுடைய டிமாட் கணக்குகளில் பதிவு செய்யப் பட்டுள்ள மொபைல் எண் மற்றும் மின்னஞ்சல் முகவரியை புதுப்பிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

மின்னணுவாக்களிப்பு தொடர்பாக ஏதேனும் கேள்விகள் அல்லது சிக்கல்கள் இருந்தால் www.evoting.nsdl.com மற்றும் அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் ("FAQs") மற்றும் மின்-வாக்களிப்பு கையேட்டை உதவிப் பிரிவின் கீழ்பார்க்கவும் அல்லது avoting@nad.comக்கு மின்னஞ்சல் அனுப்பவும்.

**ஆல்டிஜி டெக் லிமிடெட் நிறுவனத்திற்கு**
**(முன்னர்ஆல்செக் டெக்னாலஜிஸ் லிமிடெட் என்று அழைக்கப்பட்டது)**
ஒப்பம்
**ஷிவானி சர்மா**
**நிறுவனத்தின் செயலாளர்**

நாள் : ஜூலை 16, 2026
இடம் : சென்னை